மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.
19

ஞானப்பிரகாசம்.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

புத்தகம் - க. யாழ்ப்பாணம்:—சாதாரண௵ மாசிமீ. இலக்கம் - எ.

உ

கணபதிதுணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
யனைத்தும்வென் றரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

ஞானப்பிரகாசம்

பிரணவம்.

பிரணவமானது வேதாத்தியயனத்திற்கு முன்னும் பின்னும் ஓதப்படுகின்றது. இது உத்கீதை எனவும் சுத்தமாயை எனவும் மூலமதாகின்ற மொழி எனவும் தனிமொழி எனவும் குடிலை எனவும் ஓங்காரமெனவும் மந்திரராசம் எனவும் பெயர் பெறும். அக்ஷரங்களும் வேதங்களும் மந்திரங்களும் இதனையே தமக்கு மூலமாகவுடையன. காசியிலே இறப்பவர்களுக்கு, சிவபெருமான் உபதேசித்தருளும் தாரகப் பிரமமாய்விளங்குவது. வலம்புரியின் வடிவினை உடையது.

இது "ஓம்" எனக் கூடிநிற்குங்கால் சமட்டிப்பிரணவம் எனப்படும். அகார உகார மகாரமெனத் தனித்தனி பிரிந்துநிற்குங்கால் வியட்டிப்பிரணவம் எனப்படும். சமட்டி - சேர்த்துக்கூறுவது. வியட்டி - பிரித்துக்கூறுவது. அதிசூக்குமை, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குக்கள் வியட்டிப்பிரணவமாகிய நாத விந்து மகார உகார அகாரங்களை ஆதாரமாகக் கொண்டுநின்று தோற்றி ஒடுக்குறும் எனச் சைவாகமங்கள் கூறுகின்றன.

இப்பிரணவம் பரமெனவும் அபரமெனவும் இருவகையினதாகும். பரப்பிரணவம் சிதாநந்த சொரூபமாகிய சிவமே எண்ணுதற்கரிய ஆனந்தமாக்கும்பிரகருடத்தோடு உறவெஞ்ஞான்றும் திரமொன்றி நாதனமாயிருத்தலினால் பிரணவமெனத் திகழாநிற்கும் என்றுணர்க. அபரப்பிரணவமென்பது மாயாசொரூபமாய் வயங்குகின்ற சத்த உருவமேயாகும். இந்த மனுவினிலே சிவதத்துவ வுண்மைஞானமென்னும் பிரகருடம் உண்டாகிப் புதிய மகத்துவமானது மெய்யுடன் பொலிவுறும் சிவர்க்கு

உறுதலினால் பிரணவமெனக் கூறுநிற்பர் தெளிந்த அறிவினையுடையோர். அன்றியும் பரசிவ வாச்சியத்திற்கு இது நீங்குதலிலதாகிய வாசகமாமாதலினால் அளவற்ற ஒளிமயமாய் நிறைந்துநின்ற கருணைப் பரவப்பிரணவத்தை அடைவதற்குச் சிறந்த காரணம் நன்காதலிற் பிரணவமென்றும் கூறுவர்.

முன்னொரு கற்பத்திலே பிரமதேவன் ஐந்தழல் நடுவணின்று மூன்றுவருடம் சிவபெருமானைநோக்கித் தவங்கிடந்து அநுக்கிரகமுற்று மீண்டு, தமது கருத்தினெண்ணி மூவுலகங்களையுஞ் சிருட்டித்து, அவைகளைத் தபாக்கினியினாற்றகித்தானாக அவற்றினின்றும் முறையே, அழலும் காற்றும் செங்கதிரும் வந்து தோன்றுதலும் மீட்டும் அவர் அவைகளைத் தகித்தலும் அவற்றினின்றும் முறையே இருக்கு முதலிய மூன்று வேதங்களும் உற்பவித்தன. அவைகளையும் அவர் தகித்தலும் அவற்றினின்றும் முறையே வியாகிருதிகள் மூன்றும் வந்தன. அவைகளையும் தகித்தலும் அவற்றினின்றும் முறையே ஆதித்தர் என ஒளிர்கின்ற அகர உகர மகரங்கள் தோன்றின. தோன்றிய அம்மூவக்கரங்களையும் ஒன்றுறச் சேர்த்து "ஓம்" என நிறுவி அருளினார். இப்பிரணவத்திலே பரசிவமே பிரதிவிம்பமாயிருக்கும் ஆதலினால் சிவவாசகம் எனப்படுவதாயிற்று. ஆதலால் இரும்பும் அழலும்போல அப்பரம்பொருளதுவும் இதுவும் இரண்டன்று. வாய்திறக்கும் தொழில் நிகழ்ச்சியினால் அகாரமாகி, இதழ்குவித்தற்றொழில் நிகழ்ச்சியினால் உகாரமாகி நின்று, மகாரமாகி ஒடுக்கமுற்று நின்றகாரணத்தினாலே, எவையும் அப்பிரணவத்திலே தோன்றி நின்று ஒடுங்கும் என்பது பெறப்பட்டது.

வரும்.

கம்பராமாயணசிவபரத்துவம்.

(யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் வண்ணைநகர் ஸ்ரீ. வயித்தீஸ்வரசுவாமி கோயிலிலே கம்பராமாயண வியாக்கியானம் செய்துவருங்கால் அவர்கள் எடுத்து விளக்கியவைகள் பொன்போற் பொதிந்துவைக்கப்பட்டன முதற்பெருங்கருவியாக இது எழுதப்பட்டது.)

முதல், நூலாசிரியர் நாமநிச்சயம் செய்யப்படும். இராமாவதாரம் எனப்படும் இராமாயணத்தைத் தமிழிலே அருளிச்செய்த ஆசிரியர் கம்பர் எனப்படுவார். இவ்வாசிரியர் ஓர் வடநாட்டரசன் மகன் என்றும் அவன் கணிதநூலுடையார் விதித்தவழியே தன் மகவினைப்புறங்காட்டில் இடுவித்தானென்றும் சோழநாட்டுத் தேரழுந்தூர்ப் பிடாரி பூசை செய்யும் ஓச்சன் ஒருவன், தன்கருமம்பற்றி அங்குச் சென்றிருந்தவன், இப்புதல்வனைக் கண்ணுற்று எடுத்துத்தன் னூரடைந்து, தான்வழிபடுகடவுளாகிய திருவேகம்பமுடையார் திருநாமமிட்டு வளர்த்துவந்தான் என்றும் "தமிழ்நாவலர் சரிதம்" வரலாறு கூறுநிற்கும். திருவேகம்பமுடையாரைக் கம்பர் என்றே வழங்கும் வழக்குண்மைக்கு "கள்ளக்கம்பனையெங்கள்பிரானை" எனவரும் தமிழ்த்திருமறையே அமைந்த சான்றாம். அன்றியும் சிவஞானயோகீசுவரர் அருளிய "திருவேகம்பரந்தாதி" என்பது "கம்பரந்தாதி" என்றே வழக்கில் நிற்குமாற்றானு மறிக.

இனி ஒருசாரார் இராமாயணச்செய்யுள்களைத் தத்தம் மதச்சார்பு தோன்றத் திருத்தியவர், நூலாசிரியர் பெயர்ப்பொருளிற் சிறிது ஆராய்ச்சி பிறக்கின், சைவன் என்பது வெளிப்படும் என்று அஞ்சி, அப்பெயர் உலகெங்கும் பரவி வழக்கிடத்தே அடிப்பட்டமையின், மாற்றுமாற்றலிலராய், அதற்கு வெவ்வேறு காரணங்கள் பற்பல கற்பித்து விடுவாருமாயினார் என்றுணர்க. அவை "கம்பங்கொல்லையைக் காவல்பூண்டிருத்தலினால் கம்பர் எனப்பட்டார்" என்றாற்போல்வன.

சொன்னடை, பொருணடை பாவநாகதி, காதைகளை விரித்துரைக்குங்கரிசறுயோக்கு. ஆகியன ஒத்து நடவாது ஒருவரை நோக்க மற்றையோர் முரணியிருப்பது சிருட்டியின் இயல்பே என்பதை அறியாதார் இவ்வுலகில் எவர். அன்றியும் மாணிக்கமும் போலிமணிகளும் வைரமும் பளிக்கு முத

வியனவும் கலப்புறச் செய்து ஓரிடத்தேவைக்கப்பட்டிருப்பினும், பார்வை வல்லானொருவன், அவைகளைப் பகுத்துக்காணும் திறமுடையனேயாவன் அதுபோல, சான்றோர் அருளிய செய்யுள்களும் பின்னையார் செய்த செய்யுள்களும் தம்முட்டலைமயக்குற்றுக் கிடப்பினும் பண்டைநூலுரையாராய்ச்சியுடையோர் அதிவிரைவில் கண்டு உணர்ந்து பகுத்துக்காணும் திறமுடையோராவர். இவ்விராமாயணச் செய்யுள்களுட் சிற்சில, முன்னொடு பின்முரண், நின்றுபயனின்மை, கூறியது கூறல், பொருத்த மின்மை, இன்னோசையியை பின்மையிற் செவிச்சுவைபடாமை, பயனிலடைகளினடுக்கு முதலிய குற்றங்களுடன் விரவிக்கிடப்பக்காண்டுமெனின், அவைதாம், வேற்றோர் சொல்லொடு விரவியும் அன்றி அவர் சொல்லேயாகியும் கலப்புற்று இருப்பனவாம் என்று கண்டு, முற்கூறிய கருவிகள் கொண்டு பகுத்து வேறுபாடறிந்து கோடலே முடித்த கேள்வியுடையார்க்கடைத்ததொரு கடப்பாடாகும்.

"புவியினுக்கணியாயான்றபொருடந்துபுலத்திற்றாகி, அவியகத்துறைகடாங்கிவைந்திணைநெறியளாவிச், சவியுறத்தெளிந்துதண்ணென்றொழுக்க முந்தழுவிச்சான்றோர், கவியெனக்கிடந்தகோதாவரியினைவீரர்கண்டார்."

"கற்பகமனையவக்கவிஞர்காட்டிய
சொற்பொருளாமெனத்தோன்றல்சான்றது."

என நூலுள் ஆசிரியர் கூறுமாற்றானே தம்மியல்பு வெளிப்படவைத்தமை உய்த்துணர்ந்துகொள்க. இந்நூலாசிரியர் கம்பர் செய்ததாக அச்சிடப்பட்ட "செம்பொற்சிலை எழுபதும்" திருவள்ளுவநாயனார் செய்ததாக வெளிவந்த "ஞானவெட்டியானுமே" மெய்ம்மைகாணலுறுவார்க்கு அமைந்த சான்றுகளாகி, பின்னையார்செய்துவிடும் பொய்ம்மைகள் இவையெனக் காட்டாநிற்கும்.

இவ்வாற்றால், இவ்வாசிரியருக்கிடப்பட்டது திருவேகம்பமுடையார் திருநாமமே என்பதும், ஏனையவைகள் யாவும் வெறும் கற்பனைசரித்திரமே என்பதும் கம்பர் தம்புதல்வனுக்கு "அம்பிகாபதி" என நாமகரணஞ் செய்தமையினால் ஐயமின்றி எவரும் அறியலாகும். அம்பிகை - பார்ப்பதி. பதி - தலைவன். சைவவொழுக்கத்தினின்றும் வேறுபடும் கொள்கையுடையோர் இத்தகைய சிவநாமங்களை இட்டு வழங்காமை இன்றும் காணலாகும். இக்கருத்தானன்றே வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் தாமியற்றிய பாரத உரையிலே (வாரணாவதச்சருக்கம் ௩௩௰-ம் செய்யுள் விசேடவுரை) ஆசிரியர் கம்பர் என்றதன்றிக் கம்பநாட்டாழ்வார் என்னாதுவிடுத்ததூஉமாம்.

இனி ஆசிரியர் கம்பர் சிவபெருமானே பசுபதிப்பெயருடை முழுமுதற்கடவுளெனப் பற்றி நின்ற துணிபுடையராவர் என்பதை அவர் அருளிய இராமாயணச்செய்யுள்கள்கொண்டே எமதறிவிற்கெட்டியவாறு காட்டுகின்றாம்.

வரும்.

தொல்லாசிரியர் செய்யுளழகு.

மஞ்சார்மலை வாரண மொத்தது வானினோடும், வெஞ்சாயை யுடைக்கதி ரங்கதன் மீதுபாயும், பஞ்சானன மொத்தது மற்றது பாயவேறுஞ், செஞ்சோரி யெனப்பொலி வுற்றது செக்கர்வானம்.

இதன்பொருள். அத்தகிரி யானையை ஒத்தது; கதிர் சிங்கத்தை ஒத்தது; செக்கர்வானம், பாய ஏறும் சோரிபோல விளங்கிற்று என்க.

மீனுடை யெயிற்றுக்கங்குற் கனகனை வெகுண்டுவெய்ய, கானுடைக் கதிர்களென்னு மாயிரங் கரங்களோச்சித், தானுடை யுதயமென்னுந் தமனியத் தறியுணின்று, மானுட மடங்கலென்னத் தோன்றினன் வயங்குவெய்யோன்.

இ—ள். விண்மீன்களாகிய பற்களையுடைய கங்குற்காலமாகிய இரணியனைச்சீறி, கதிர்களாகிய ஆயிரம் கரங்களை நீட்டி, உதயகிரியாகிய பொற்றூணினின்றும் நரசிங்கம் போலச் சூரியன் உதயஞ் செய்தான் என்க.

இவ்விரண்டு செய்யுள்களினும் கூறப்பட்ட உதயாத்தமன வருணனையின் இயைபு, புலவர் மனங்களைக் கவரும் இயல்பு வாய்ந்துள்ளது. அஃதாமாறு காட்டுதும்.

போகுங்காலையிற் சிங்கமாயினோன் பின் வருங்காலையிற் மற்றொன்றாதல் அசம்பாவிதமாதலின், மறைந்துபோங்காற் கதிரவனைச் சிங்கமென உவமித்துவிடுத்ததற்

கேற்ப, உதயஞ்செய்யுங்காலும் அவனைச் சிங்கமென்றே உவமித்தல்வேண்டுமாதலிற் கூறியவாற்றாற் கூறலின்றி வேற்றொருபொருள்பயப்ப மற்றோர்நெறியாற் புதுமொழி புணர்த்து "மானுடமடங்கலென்னத்தோன்றினன்" என்று தொடர்ச்சியினினிமை தோன்ற உவமயியலிலக்கணம் புலப்படுத்திய ஆசிரியர் கம்பரது நுண்ணறிவின் அருமையும் கற்பனுசக்தியும் பிறர்மாட்டுக்காண்டல் அரிது. முகிற்கணம் சூன்முதிருங்காறும் மலையினைச் சேர்ந்திருத்தலானும், அவைகளும் யானையோடுவமிக்கப்படும் வழக்குண்மையானும், பொதுத்தன்மை நன்குருக மஞ்சார்மலை என்றார். அதனை "இலங்கலாழியினுன்களிற்றீட்டம்போற், கலங்குதெண்டிரைமேய்ந்துகணமழை" என்பதனானு முணர்க. முகிலை உணர்த்தும் பிற சொற்களுமுளவாக, "மஞ்சு" என்பதனை ஆய்ந்து கோத்தார், அது யானைமுதுகெனவும் பொருள்பட்டு மலையை யானையோடுவமித்ததற்கேற்ப வேண்டும்பொருள்பயந்து நிற்கும் சிறப்புடைமைநோக்கி.

இன்னும் உதயகிரியிலே சிந்தூர அருவி வீழ்தலாலும், சிந்தூராகரத்திற் பிறந்து பன்னெடுங்காலம் சிவப்பேறின மாணிக்கங்கள் உண்மையினாலும் அம்மலை கதிரவன்தோன்றச் செவ்வொளி பரப்பிப் பொன்னெனமிளிருமாகலின் "உதயமென்னும் தமனியத்தறி" என்றும் கைகள் எனவும் கிரணமெனவும் இருபொருள் தோன்றக் கரமென்றும், நரசிம்ஹம் என்னும் வடமொழியினை "மானுடமடங்கல்" எனப்பெயர்த்தும் விளக்கிய ஆசிரியர் செய்யுளமைதிகள் ஆற்றவும் அறிவு பெருக்கும் மாண்பு உய்த்துணர்வார்க்கே புலனாகும் என்க.

வைத்தியவிசாரம்.

(அகூ-ம் பக்கத்தொடர்ச்சி.)

போலிவைசூரி.

வைசூரி முன்னொருகால் வந்திருப்பினும் கோவைசூரிப்பால் *(Vaccination)* கட்டப்பட்டிருப்பினும் இப்போலி வைசூரியின் கொரேமும் குணங்களும் மிகவும் பேதப்பட்டுவிடும். காய்ச்சல் வேகங்கொண்டெழினும் பெரும்பாலும் ஒருநாளைக்குமட்டும் நிற்கும். வியாதியாளனுக்குப் பிற்பகல் இருந்த சுகநிலை மாறுபட்டு இரவில் நித்திரையும் இன்றி உடம்பில் ஒருசிறிது வருத்தமுளதாகி, விடிந்தபின் பருக்கள் தோன்றிக் கண்ணுக்குப் புலனாகும். கைகளின் சந்துகளிலும் மூக்கின் பக்கங்களிலும் பெரும்பாலும் முதன் முதன் உண்டாகும். மூக்கின் பக்கங்களிலே பருக்கள் முதல் தோன்றும் தன்மையினின்றும் நோயினை நிதானித்துக்கொள்ளலாகும். பருக்கள் அதிவிரைவிலே மறைந்துபோகும். ஒன்றுடன் ஒன்று கலந்திராது. பருக்கள் உருவில் சிறியனவாயினும், சிற்சில நிரைநிரையாகத் தோன்றி நடுவே குழியுடையனவாகயிருக்கும்; அவற்றுள் பற்பல நீர் கொள்ளுதலின்றி அடங்கிவிடும். அன்றி நீர்கொள்ளினும் சுருங்கிக் காய்ந்தொழியும். ஒழியாதாயின் சிலநாள் வரைக்கும் முத்துக்கள் போல நிறங்கொண்டு விளங்கும். உடம்பெங்கும் பருக்களுள் சில நீர்கொண்டும், சில கொள்ளாதும் இவ்வாறு பலபேதங்களை ஏககாலத்திலே காணலாகும். ஆயினும் ஒன்றும் நிறைவுடையதாகாது. பருக்கள் மாறுந்தன்மையுடையனவாயினும், அதிகமாயிருப்பின் இரண்டாங்காய்ச்சலும் தோன்றும். எனினும் அவைகள் வெளியே புலப்பட்டவுடன் வருத்தம் யாவும் தணிந்துபோகும்.

வரும்.

பத்திராதிபர்.

சீவகசிந்தாமணி ஆராய்ச்சி.

ஐம்பெருங் காப்பியங்களுள்ளே தலைமை பெற்று விளங்குவதாகிய சீவகசிந்தாமணியை ஆராய்ச்சி செய்துவருவதால் தமிழ்ப் பாஷாபிமானிகள் பலரும் பெரும்பயன

டைவார்கள் என்பதிற் சிறிதும் ஆக்ஷேபமில்லை. இது செஞ்சொலறிவாளர்கள் எவர்க்கும் ஒத்ததோர் நெறியாகலின் இப்பொழுது அவ்வாராய்ச்சிக்கண் நேர்ந்த சிலவற்றை மற்றையோருக்கும் உபயோகமாக எடுத்துக்கூறுதும்.

கோவிந்தையாரிலம்பகம்.

"மோட்டும் முதுநீர் முதலைக்கு வலியதுண்டேற், காட்டு ணமக்கும் வலியாரையுங் காண்டு மென்றே, ஏட்டைப் பசியினிரைகவ்விய நாகமே போல், வேட்டந் நிரையை விடலின்றி விரைந்த தன்றே."

(இ—ள்.) அப்பொழுது வேட்டுவெச்சாதி முதுநீரிடத்துப் பெரிய முதலைக்கு வலியதொன்று உண்டாயின் நமக்கும் காட்டிடத்து வலி; யாரையுங் காண்டும் என்று கூறி இரைக்கிடைந்த பசியால் இரையைக் கவ்விய நாகம்போல் அந்நிரையைக் கைவிடுதலின்றாய்ப் போரிற்கு விரைந்தது என்க. (௩அ)

இம்மூலபாடமும் உரையும் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணாக்கரும் எமது மாதுலரும் ஆசிரியருமாகிய ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் கையால் எழுதிய ஓர் பிரதியிற் கண்டது. இப்பாடத்தின்படி அநுவாதமாய் இங்கேகூறியவாக்கியம் இரண்டு முடிபுடையதாகின்றது. ஒன்று "மோட்டும் முதுநீர் முதலைக்கு வலியதுண்டேற் காட்டுணமக்கும்வலி" என்பது. வலியுண்டு என உண்டு என்பது பின்னுங் கூட்டற்பாலது. உண்டேல் என்னும் எச்சம் வலியுண்டு என்பதனோடு முடிந்தது. இதனால் தந்நிலத்திலே யாவரும் வலியர் என்பது கூறப்பட்டது. நமக்கும் என்புழி உம்மை இறந்ததுதழீஇயிற்று. இவ்வாக்கியம் "நெடும் புனலுள் வெல்லு முதலையடும் புனலினீங்கி னதனைப்பிற" என்னும் திருக்குறளின் பொருளைத் தழுவிநின்றது "முதுநீர்" "நெடும்புனல்" என்பதை நோக்கிநின்றது.

மற்றை வாக்கியம் "யாரையுங்காண்டும்" என்பது. "காண்டும்" என்பது வெல்லுதும் எனப் பொருள்படும். "வேள்விகாணிய வந்தார் வில்லுங் காண்பார்" என்னும் இராமாயணச் செய்யுளையும் நோக்குக. "காண்டும்" எனக் கூறுதற்குக் காடாகிய தந்நிலத்துள்ளேம் என்பது காரணம்.

இப்பொழுது அச்சிட்ட பிரதியிலே "காட்டுணமக்கும்வலி" என்னும் பாடம் உம்மை நீங்கிக் "காட்டுணமக்குவலி" என்று வேறாயிற்று. உரையிலே முதலாம் வாக்கியத்தின் இறுதிச் சொல்லும் இரண்டாம் வாக்கியத்தின் முதற் சொல்லுமாக முறையே உணரும்படி பிரிந்து நின்ற "வலி, யாரையும்" என்னும் இருசொற்களும் "வலியாரையும்" என ஒரு சொல்லாயின. இந்தப் பாடத்தினாலே அவ்விரு வாக்கியமும் ஒருவாக்கியமாகின்றது. ஒரு வாக்கியமாய் நிற்கும்போது ஒரு பொருளும் புலப்படவில்லை. உண்டேல் என்னும் எச்சத்திற்கு முடிபும் இல்லை. காண்டும் என்பதனோடு முடித்தற்கும் இயைகின்றிலது. உரையாளர் கூற்றுக்களை நிச்சயித்தற்குப் பிரதியெழுதுவோர் யாவருங் காரணராகார்.

காந்தருவதத்தையாரிலம்பகம்.

"அரசனைக்கண்டுகண்ணுற்றவர்களைவிடுத்துநன்று, ளிரேவதிவியாழவோரையிருஞ்சிலைமுளைப்பவேறிக், கரைகடலழுவநீந்திக்காற்றினுங்கடுகியைஞ்ஞா, றுரையுடைக்காதமோடியோசனையெல்லைசார்ந்தே."

இச்செய்யுளிலே "கரைகடலழுவநீந்தி" என்பதன் உரையும் அச்சுப்பிரதியிலே வேறாயிற்று. "கரைகடல்—கரைகிறகடல். கடலழுவம்—கரையண்ணிதானகடற்பரப்பு" இவ்வளவும் நச்சினார்க்கினியர் "கரைகடலழுவம்" என்பதனை விளக்கிய உரை. இஃது இப்போது "கரைகிறகடலழுவம்—கரையண்ணிதானகடற்பரப்பு" என்றுகொ

ள்ளப்பட்டது. "கரைகடல்" என்பதன்றிக் "கரைகிறகடல்" என்பது மூலபாடமன்று. மூலபாடத்திலே இல்லாதது உரையிலே பதச்சேதத்திலே வராது. "கரையண்ணிதான" என்பது வருவித்தது.

௬ இலம்பகம்.

"நல்லவனோக்கநாய்கன்றேர்ந்துபூங்குவளைப்போதி, னல்லியுட்கிடந்தவோலைதாளறுசலாகையாதல், சொல்லுமென்றாய்ந்துகொண்டுதுகிலிகைக்கணக்குநோக்கி, வல்லிதிற்சலாகைசுற்றியோலையைவாசிக்கின்றான்." (௧௭௭)

இச்செய்யுளிலே "துகிலிகைக் கணக்கு நோக்கி" என்பதன் உரை "துகிலிகையால் எழுதின எழுத்தைப் பார்த்து" என்பது. இஃது "துகிலிகைக் கணக்கால் எழுதின எழுத்தைப் பார்த்து" என அச்சிடப்பட்டது. இவ்வுரையின்படி "கணக்கு" என்பதன் பொருள் புலப்படவில்லை. அவ்வுரையின்படி துகிலிகை—எழுதுகோல். கணக்கு=எழுத்து. "வரி பொறி கணக்கிரேகை விரித்த வக்கரமெழுத்தாம்" என வருஞ் சூடாமணி நிகண்டையும் நோக்குக.

சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயர்
வண்ணார்பண்ணை.

உ

சிவமயம்.

தமிழ்மொழி.

(௯௭-ம் பக்கத்தொடர்ச்சி.)

தமிழ்ப்பரப்பு.

திரணதூமாக்கினி என்னும் இயற்பெயரையுடைய ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனார் இயற்றிய தொல்காப்பியத்திற்குப் பாயிரங் கூறிய பனம்பாரனார் "வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" எனத் தமிழின் எல்லையை வடக்கின்கண் வேங்கடமலையாகவும் தெற்கின்கண் குமரியாறாகவும் நிறீஇயினார். இப்பாயிரத்தை வாசிப்போர் இவ்வெல்லையைக் கடந்து தமிழ்மொழி பரவிற்றில்லைபோலும் என ஆசங்கித்தற்கு இடமுண்டன்றோ. ஆயினும் அதனைச் சிறிது ஈண்டு ஆராய்வாம். தமிழர்கள் தாங்கள் நாடிச்சென்ற இடத்தை **நாடு** என்றும், நகர்ந்து சென்றடைந்த இடத்தை **நகரம்** என்றும், ஊர்ந்து சென்றடைந்த இடத்தை **ஊர்** என்றும் கூறுவாராயினர். நாடு, நகரம், ஊர் என்னும் இம்மூன்று மொழிகளும் தமிழ்மொழிகள் என்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்ததே. ஆகலின் ஊர் என்னும் பதத்தை இறுதியிற்கொண்ட மொழிகளைப் பெயராகவுடைய இடங்களில் தமிழ் பரவியிருக்கவேண்டுமென யூகிப்பதற்கு இடமுண்டன்றே. ஊர் என்னும் மொழியை இறுதியிற்கொண்ட சில இடங்களை விளம்புவாம்; கண்ணனூர், மங்களூர், நெல்லூர், குண்டூர், இந்தூர், லாகூர், சந்திரநாகூர், சிங்கப்பூர் முதலிய பலவேயாம். இவ்வூர்களில் சில வடவிந்தியாவாகிய தமிழ் வழங்கா நாட்டின்கண் உள்ளனவாகி ஏற்படுகின்றனவாகலின் மேற்கூறிய முடிவு எவ்வாறு பொருந்துமென்னும் ஆசங்கை நிகழுமன்றே காட்டுதும். அவற்றுள் நெல்லூர் என்னும் பதத்தை யாராய்வாம் நெல்லூர் என்பது நெல், ஊர் என்னும் இரண்டு தமிழ்மொழிகளானாய ஓர் தொடர்மொழி. நெல் என்பது "நெல்லுப் புல்லு வரகு தினை சாமை இறுங்கு தோரை இராகியோடெட்டு" என்னும் தமிழர் முதற்கூலப் பொருளில் முதன்மையாய் விளங்குவது. தமிழர் முதற்கூலப் பொருளையே பெயராகவுடைய எல்லைக்கண் தமிழ்மொழி வழங்கிற்று என்பதைச் சொல்லவும் வேண்டுமோ. நெல்லூருக்கு வடக்கே குண்டூர் என்னுமூர் உண்டு. அது குன்றூர் என்னுஞ் சொல்லின் மரூஉவேயாம். குன்றூர் என்பதற்கு மலைநாடு என்பது பொருள். மேற்கூறிய இரண்டு ஊர்களிலும் தற்காலம் வழங்கும் மொழி தெலுங்குமொழியே யெனினும் முன்னொரு காலத்தில் தமிழ் வழங்கி யிருந்ததென்றே புலப்படுகின்றது. இவ்வாறே மங்களூர், கண்ணனூர் என்னும் இரண்டிடங்களிலும் கன்னடமும் மலையாளமும் இக்காலத்தில் வழங்குமேயெனினும் அவையும் தமிழ் நாடென்றே துணிந்து கூறலாம். தமிழ்ப் பெருங் காப்பியங்கள் ஐந்தனுள் சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இருபெருங் காப்பியங்களையும் இயற்றினார் முறையே சேரநாட்டரசன் பிற்றோன்றலாம் இளங்கோவடிகளும் அச்சேரன் சமஸ்தானத்தைச் சார்ந்த சீத்தலைச் சாத்தனாரும் எனின் மலையாளத்தில் தமிழ் வழங்கியிருந்ததென்பதை வலியுறுத்த வேறு யாது சான்று வேண்டும் இருபெருநூலும் பிறந்த

இடமும் மலையாளத்திலுள்ள கருவூர் என்னும் திருவஞ்சைக்களமாம். இக்காலத்தே மலையாளத்தில் வழங்கும் மொழிகளுள் தமிழ்மொழிகள் எண்ணிறந்தன. இக்கருத்தேபற்றிப்போலும் தமிழ்த்தெய்வவணக்கம் கூறுவான்போந்த ஆங்கிலத் தமிழ் வித்துவசிரோமணியாகிய சுந்தரம்பிள்ளையவர்கள்

பல்லுயிரும்பலவுலகும்படைத்தளித்துத்துடைக்கினுமோர், எல்லையறுபரம்பொருள்முன்னிருந்தபடியிருந்ததுபோல், கன்னடமுங்களிதெலுங்குங் கவின்மலையாளமுந்துளுவும், உன்னுதரத்துதித்தெழுந்தேயொன்றுபலவாயிடினும், ஆரியம்போலுலகவழக்கழிந்தொழிந்துசிதையாவுன், சீரிளமைத்திறம்வியந்துசெயன்மறந்துவாழ்த்துதுமே.
எனத் துதிப்பாராயினர்.

இதுகாறுங் கூறியவாற்றால் வடவேங்கடத்திற்கப்பாலும் தமிழ் வழங்கியிருந்ததென்பது புலப்படுகின்றது.

யவனர் அரிசி என்பதனை *(Oryza)* அரிஜா என்றும், இஞ்சிவேர் என்பதனை *(Zingiber)* ஸிஞ்சிபேர் என்றும், கருவா (இலவங்கம்) என்பதனை *(Karpion)* கார்பியன் என்றும், ஹீப்ரேயர் கவி (குரங்கு) என்பதனைக் கபீம் என்றும், தோகை (மயில்) என்பதனை டுகீம் என்றும் வழங்குதலால் பண்டைக்காலத்தில் தமிழானது அவர் பிரதேசங்களிலும் நன்குவழங்கப்பெற்றதென்பது விளங்குகின்றது. சிலப்பதிகாரத்தில் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், தமிழ்வரம்பறுத்ததண் புனனாடு" என்பதில் தொடியோள் பௌவம் என்பதை விளக்குமிடத்தில் அடியார்க்கு நல்லார் "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடு கொடுங்கடல் கொள்ள" என்னும் சிலப்பதிகாரவடிகளை உதகரித்து 'தலைச்சங்கமிருந்தகாலத்தில் பாண்டிநாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னு மாற்றிற்கும் குமரியென்னு மாற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த எழ் தெங்கநாடும் எழ் மதுரைநாடும் எழ் முன்பாலைநாடும் எழ் பின்பாலை நாடும், எழ் குன்றநாடும், எழ் குணகரை நாடும் எழ் குறும்பனை நாடும் என்னுமிந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லமுதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல்கொண்டொழிதலால் குமரியாகிய பௌவமென்றார் என்று உணர்க' என விளக்கியிருக்கின்றனர். இது அக்காலத்தில் தமிழகத்தின் விரிவும் பரப்பும் மிகப்பெரிது என்பது முதலிய யூகிக்க இடந்தருகின்றது. இதுபோலவே சிங்கபூர், நாகபூர் முதலிய ஒவ்வொரு மொழியையும் ஆராயின் தமிழ்மொழியானது இந்தியாவிலும் அதைச் சார்ந்த தீவுகளிலும் பரவியிருந்ததாகத் தெரியவருகின்றது. இவ்வாராய்ச்சி "வடவேங்கடந் தென் குமரி யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து" என்னும் பாயிரச் சூத்திரத்திற்கு மாறுபடுமே எனின் அற்றன்று. ஆசிரியர் தொல்காப்பியனார் வடவேங்கடம் தென்குமரியாகிய இவ்வெல்லைக்குள் வழங்குந் தமிழ் மொழிக்கே இலக்கணங் கூறுவான் போந்தனரேயன்றி மற்றைய நாடுகளினும் சிதைந்து வழங்கும் தமிழ் மொழிக்கன்று எனக் கோடலே அமைவுடைத்து. சில மாதங்களுக்குமுன் தஞ்சைமாநகரத்தில் நடந்தேறிய மதுரைத் தமிழ்ச்சங்கத்து வருடக்கொண்டாட்டத்தில் "தன் சரிதம் உணர்த்துமொழி" என்னும் தலைப்பின் கீழ் ஊர் என்னும் விஷயத்தைப்பற்றி எமது நண்பரும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துத் தமிழ்ப்புலவர்களில் ஒருவருமாகிய ம-௱-௱-ஸ்ரீ. ஐ. சாமிநாத முதலியார் அவர்கள் அழகுபெற விதந்து கூறினர்.

வரும்.

சே. சிவஞானம்பிள்ளை.

சிலப்பதிகாரச்சிறப்பு.

பஞ்சகாப்பியங்களென்று கூறப்படும் சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்னும் நூல்களைப் பண்டைக்காலத்துத் தண்டமிழ்த் தகுதிநாடிய சேர சோழ பாண்டிய அரசர்களே போற்றி, முச்சங்கத்தினு முதன்மையுற்று வளரச்செய்தனர். இந்நாள் காறும் அவை, அமிழ்தினுமினிய தமிழ்மொழிப் பெருமையை விளக்கும் ஐம்பெருங்காப்பியங்கள் என்று பாராட்டப்படுகின்றன.

இப் பெருங்காப்பியங்களுளொன்றாகிய சிலப்பதிகாரத்தைப்பற்றிய சில விஷயங்களை ஆராய்ந்து சில வாக்கியத்தொடைகளை ஈண்டு எம் சிற்றறிவிற்கேற்ப வரைகின்றாம்.

சிலப்பதிகாரத்திலே, வைசியமரபிற் பிறந்த கோவலன் என்பவனையே கதாநாயகனாகக் கூறப்பட்டிருக்கின்றது. கோபாலன் என்பதன் மரூஉச் சொற்பெயரே கோவலன் என்பதாகும். அளகாபுரிக் கதிபதியாகிய குபேரனையொத்த குறைவில் செல்வமுடைய இக்கோவலன், கற்பினலருந்ததியையொத்து விளங்கிய கண்ணகியை விவாகஞ்செய்து வாழ்ந்தனன். வாழும் நாளிலே, கோவலன், தனது காமக்கிழத்திக்குத் தன்னிடத்துள்ள பெருந்திரவியங்களையெல்லாம் பேராசை காரணமாகக் கொடுத்து, இறுதியிலே இலம்பாடாகிய நோய் வருத்தத் தெருமந்து, பின்றெளிந்து, பொருள் சம்பாரிப்பானுளத்துட்கொண்டு, தன் பத்தினியாகிய கண்ணகியோடும், காவிரிப்பூம்பட்டினத்தை விட்டு, மதுரையை அடைந்து, அவ்விடத்திலே தங்கினான். கோவலன், அங்கே தங்கியிருக்குங்காலத்திலே, கண்ணகியின் காற்சிலம்பொன்றை விற்கும்படி புறப்பட்டான். முன்னே, பாண்டிமாதேவியாரின் காற்சிலம்பைவாங்கி விற்றுச் செலவு செய்து, அதனைக் கள்வர் கவர்ந்தாரென்று, பொய்மொழிபுகன்றிருந்த தட்டான், கோவலன் கொண்டுசென்ற சிலம்பைக் கண்டு, அரசனை அணுகி, இராசேந்திரா! சிலம்பு திருடிய கள்வன் சிக்கிக்கொண்டனன் என்று கூறி, அரசனைத் தனது நாடகசாலத்துளகப்படுத்திக் கோவலனைக் கொலைபுரிவித்தான். இவைகளைக் கேள்வியுற்ற கண்ணகி, கலங்கிப்புலம்பிக் கைவிதிர்த்து மெய்நடுங்கிப் பரிதாபமுற்று, அரசன் அவைக்களமடைந்து, அந்தோ! என்பிராணநாதா! என்கதியிதுவா? என்று அரற்றித் தன் வரலாறுகளைக்கூற, அரசன் அவைகளெல்லாந் தன்மாட்டுப் பொருந்திய குற்றமே என்று ஒப்புக்கொண்டனன்.

வரும்.

வ. மு. இரத்திநேசுவரஜயர்
உபாத்தியாயர்
உடுவில்.

மங்கையர்க்கரசி என்னும்

கமலாம்பிகைசரித்திரம்.

(கூடு-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்தத் தருமராசனுடைய கணக்கர்களாகிய சித்திரகுத்தர் என்னும் இருவரும் அக்கிரசந்தானி என்னும் புத்தகத்தில் எழுதிவைத்தபடியே, கொலைசெய்த சீவர்களுடைய சரீர நாசகாலத்தையும் அவர்கள் செய்த கொலைப்பாவத்தையும் தெரிவிப்பர். அதுகேட்ட தென்றிசைக்கோனுடைய தூதுவர்கள், ஓரோர் புறநிமித்தம் உண்டாக்க, அதனாலே அவர்கள் தம்முடைய தூலசரீரத்தைவிட்டு நீங்கிச் சூக்குமசரீரத்தோடு நின்று அவர்களாற் கொடுக்கப்படுகின்ற யாதனா சரீரத்தையேனும், பூதசார சரீரத்தையேனும் தரித்துக்கொண்டு குறித்த காலவெல்லைவரையும் அழியாமலிருந்து வேதனையடைவிக்குங் கருவியாகிய யாதனா சரீரத்தோடு, முள்ளுங் கல்லுஞ் சேறும் பள்ளமுங் கூரிய நாணற்புல்லும் மலையும் நெருப்பும் ஓடும் சல்லியும் சுடுமணலும் சிங்கம் புலி யானை முதலிய துஷ்டமிருகங்களும் மழை இடி மின்னல் காற்று முதலிய பயங்கர வேதனைக்காரணங்களும் கூடிய வழிகளிலே கட்டியும் அடித்தும் வெட்டியும் உதைத்தும் உருட்டியும் வருத்தி இழுத்துக்கொண்டு போக அவருடன் இளைத்து நைந்து புலம்பிக்கொண்டுபோய் யமலோகம் சேர்வார்கள். அங்கே அவர்கள் சேர்ந்தபொழுது, கொடிய வடிவங்கொண்டு உக்கிரகோபத்தோடிருக்கின்ற யமனையும், அவனுடைய பரிசாரகர்களையும், சித்திரகுத்தர்களையும் மற்றுமுள்ளோர்களையும் கொலைப்பாவிகள் கண்டமாத்திரத்தே நடுநடுங்கி எங்கி நஞ்சினைக் கக்குகின்ற அரவினை அணிமையிற் கண்டவர்களைப்போல மிகுந்த கலக்கமடைவார்கள். தருமன் அவர்களைக் கண்டவுடனே ஆலாகலவிஷம்போலக் கோபித்து திக்காரதண்டஞ் செய்குவன். சித்திரகுத்தர்கள் கொலைப்பாவிகளை எதிராகநிறுத்தி அவர்கள் செய்த பாவங்களை எடுத்துச்சொல்லி அப்பாவிகளை நரகங்களிலே செலுத்தும்படி தூதுவர்களிடம் ஒப்புவிப்பர். செங்கோற்கடவுள் அவர்களைப்பார்த்து நீங்கள் கொலையாகிய மகாபாதகத்தைச் செய்தீர்கள் தருமத்தை வெறுத்தீர்கள் நிலையில்லாதபொய்ப்பொருளை மெய்ப்பொருளென நம்பிப் பாவத்தைச்செய்தீர்கள் ஆகையினால் நீங்கள் பாபபலத்தை நரகங்களிலே அனுபவித்துத் தீர்க்கவேண்டுமென்று பலபுத்திமதிகளைக் கூறி, சண்டன் மகா

சண்டன் முதலியோரைக் கூவி அவர்களைத் தண்டிக்கும்படி ஒப்புவிப்பன். அவர்கள் கொலைப் பாவிகளைப்பிடித்துத் தலைகீழாகத் தூக்கியடித்து, மேலே வீசிச் சுழற்றி வருத்திப் பாதலத்தின் கீழேயுள்ள இருபத்தெண்கோடி நரகங்களிலேயும் செலுத்தித் தண்டிப்பர். அங்கே வருந்துங் கொலைப் பாவிகளை யமதூதுவர்கள் அவர்கள் முற்பிறப்பிற் செய்த பாவங்களையும் அவைகளின் கொடுமைகளையும் எடுத்துச் சொல்லி அறிவுறுத்துவார்கள். மகாபாதகர்களாகிய கொலைஞர்கள் இருபத்தெண்கோடி நரகங்களிலேயும் சந்திராதித்தருள்ளவரையும் கிடந்துவருந்துவர். இவ்வாறு அனுபவித்தபின், பாவசேடத்துடன் பூமியில் வந்து மரங்களாய், பட்சிகளாய், புழுக்களாய், மிருகங்களாய் பிறந்துவருந்திப் பாவசேடங்குறைய முன்னாட் செய்த புண்ணியப்பகுதி வந்துசேர அதனால் மானிட ஜெனனம் எடுப்பர்; எடுக்கும்போது பாவசேடப்பகுதியினாலே அப்பாவத்தின் இலைச்சினையுடன் உறுப்புக்குறைவுபாடு அழகின்மை புத்தியின்மை பொருளின்மை முதலிய குற்றங்களுடனேவந்து பிறந்து பெரும்பாலும் பாவங்களையே செய்வர். அன்றியும் புண்ணியம் செய்தலும் கூடும் ஆகையினால் சகிமார்களே கொலைத்தொழிலை மனசினாலே நினைத்தாலும் பாவம் உண்டாகும். காஞ்சனமாலையே, நீ எருமைமாடுபோல வளர்ந்ததேயன்றிக் கல்வியறிவு உலக அறிவு என்பவைகள் இல்லாதவளாய் இருக்கின்றாய், நீ சொல்லியவாறே அவர்களைக் கொலைசெய்யினும் எமக்கு அதனாலுண்டாகும் பிரயோசனம் என்னை? ஆகையினாலே இன்று சொல்லியதுபோல இனிமேல் ஒருகாலத்து மறந்தும் சொல்ல நினையாதே என்று கூறினாள்.

சிறிதுநேரஞ் சென்றபின் கமலாம்பிகையும் சேடியர்களும் விநோதமாக வார்த்தையாடிப் பூம்பொழிலில் சிறிதுநேரம் பொழுதுபோக்கி நேபாளதேச இராசகுமாரனுக்குக் கடிதம் எழுதியனுப்புதற்காக ஆலோசிக்க வேறொருநாள் நியமித்து அரண்மனைக்குச் சென்றுவிட்டனர்.

ஆறாம் அதிகாரம்.

பூஞ்சோலையின் மற்றொருபக்கத்தில், காண்போர் தங்களை இன்னார் என அறியாவண்ணம் அந்தரங்கமாகவிருந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றார்கள். அக்காலம் ஆனிமாசத்தின் பிற்பகுதியாதலின், பெருங்காற்றெழும்பி நந்தனவனத்திலுள்ள மரங்களெல்லாம் பிசாசுபிடித்த பெண்டிரைப்போலத் தலைவிரிகோலமாய் ஆடிக்கொண்டிருந்தன. பெருங்காற்றானது வெகுதூரத்திலுள்ள தழைகளையும் சருகுகளையும் கொடுவந்துபோடும். கூரைகளையெல்லாம் சின்னாபின்னம்செய்து பிரித்தெறியும். பிரயாணிகள் மேலேபோர்த்திய துணிகளையெல்லாம் பறக்கச்செய்யும். அவ்விடத்துள்ள மஞ்சனவாவிகளில் புனலாடிமீளும் பொன்னனையாரைப் புழுதியால் மூடிக் குளிப்பிக்கும். அவ்விடத்திலுள்ள மரங்களின் பசியதழைகளில் புழுதியை வீசி அவைகளை வெண்மையாகச்செய்யும். இவ்வாறாகிய அலங்காரம் அமையப்பெற்ற பொங்கரிற்றங்கி வார்த்தையாடும் இருவரும் யாது கூறுகின்றார்களென்பதைக் கவனிப்பாம்.

வரும்.

புன்னைமரம்.

இப்புன்னைமரம் எங்கள் நாட்டிலே இந்தியாவிற்போல அதிகம் இல்லை. மணற்றரைகளாகிய கடற்கரை ஓரங்களே இதற்கு மிகவுஞ் சிறந்தன. மற்ற இடங்களும் இவ்வளவு பயன்தருதலில்லை என்பதன்றி அவ்வளவு குற்றமுடையனவுமாகா. இது பாலுள்ள மரமல்ல. பசிய நிறமுடையது. இலை உதிர்க்கும் இயல்புடையது. அவ்விலையிலும் காம்புகளிலும் பாலும் கைப்பாகிய சுவையும் சிறிது இருக்கும் காரணத்தினால் மிருகங்கள் இவைகளை உணவாகக் கொள்ளுவதில்லை. இவ்விலைகளினின்றும் ஒருவகைத்தாள்கள் செய்யப்படுகின்றன. சித்திரை வைகாசி மாதங்களிலே மலர்ந்து காய்க்கத் தொடங்கிக் கார்த்திகையிலே பலன்தருவதாயினும் மீட்டும் அம்மாதத்தினும் அடுத்தமாதத்தினும் மலர்ந்து காய்ப்புற்று ஆனியிலே பயனைநல்கும். ஆகவே மலர்களும் காய்களும் பழங்களும் கலந்து எப்பொழுதும் பெரும்பான்மையும் இருக்கும். இதன்மலர் ஒருவகை மணமுடையது. பழம் தித்திக்கும் சுவையுடையது. சிலர் உண்பதுமுண்டு. இதன் காய்களினின்றும் எடுக்கப்படும் பருப்பு வெய்யிலிலிட்டுக்காய்ந்தபின் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கப்படுகின்றது. இவ்வெண்ணெய் உறைவதில்லை. உட்கொள்ளப்படும்

எதற்கும் இது சேர்த்து உபயோகிப்பதில்லை. விளக்கெரிக்கவும் தீவர்த்திகளுக்குமே பாவிக்கப்படுகின்றது, அதிகநேரம் நின்று எரியும். தேவாலயங்களுக்கு இது உபயோகிக்கப்படாது என்று ஆகமங்கள் விலக்கி இருக்கின்றன. இதன்பிண்ணாக்கு அடுப்பெரிக்கவும் எருவாக்கவும்படுகின்றது. மரம் விறகிற்கே பயன்படும். சிலர் இதில் மிதியடிசெய்கின்றார்கள். இதன்வேர் நாற்புறங்களிலும் மிகுதியாகப் பரவிச்சென்றிருக்கும். இன்னும் இதன்வேர் பருத்தும் ஒழுங்காயும் இருத்தலினால் வாகனங்கள் செய்யவும், மிதியடிகள் செய்யவும் கூடும். வேறும் பற்பல வேலைகளுக்கு உதவும். வாங்கு முதலியவைகளின் கால்களாகச் சிங்களவர்கள் உபயோகிக்கின்றார்கள். இது பதினாறு அடிக்கு ஒருமரமாக வைத்துண்டாக்கப்படவேண்டும். நான்கடி அகலமும் ஐந்து அடி ஆழமுமுடையதாகக் குழிகளை வெட்டி இரண்டுநாள் வரைக்கும் எருமுதலியன போடாமல் காற்றில் ஆறவிட்டுப் பின் மூன்றாம்நாள் குளத்துச்சேறு, காய்ந்த பொருக்கு, மாடு ஆடு இவைகளின் எரு இலை குழைகள் அழுகிப் பதனழிந்து மண்ணாய் மாறிய எரு நெல்லுமி முதலிய விலைகுறைந்த எருக்களை நாலடி உயரம்போட்டு அதன்மேல் சிறிது மணலிட்டுப் பின் கொத்திக் கலந்து நல்லவிதைகளைத் தெரிந்து நட்டுத் தண்ணீர் உடனே விடுதல்வேண்டும். பின் காலையும் மாலையும் தவறாது ஒருவாரம் தண்ணீர் விடுதல் வேண்டும் பின் ஒருமாதம்வரையும் இரண்டு நாளைக்கு ஒருமுறை விடவேண்டும். பின் ஆறுமாதம் வரைக்கும் நான்கு நாளைக்கு ஒருமுறை விடவேண்டும். மழைபெய்தால் இம்முறைகள் வேண்டியதில்லை. வெயிற்காலங்களிலே மிகவும் நன்றாய் நீர்விடவேண்டும். ஒருவாரத்திலே முளைகள் தோன்றி வளர்ந்துகொண்டுவரும். மூன்றுவருஷங்காறும் எப்படியும் தண்ணீர் ஊற்றிக்கொண்டுதான் வரவேண்டும். இதன்கொம்புகள் நேரியனவல்ல. வளைவுடையனவேயாகும். கிளைகள் வேரில் நின்று தோன்றி வளரும். பெரும்கொம்புகள் நாற்புறங்களிலும் பரந்தெழுவதில்லை. இது ஏறக்குறைய க௦௦-வருஷம் வரைக்கும் நிற்குமென்று சில ஆங்கிலேயபண்டிதர்கள் கூறுகின்றார்கள். இடையிடையே பெரும்பாலும் ஆடியிலும் தையிலும் குழிகளை மூன்றடி ஆழம் கொத்தி மழைத்தண்ணீர் நிற்கும்படி, பாத்தியாக்கிவிடவேண்டும். மழைநீர் அடிமரத்திலே கட்டுப்பட்டு நின்றால் இடப்பட்ட எருவின் சத்துகள் வேரிலே சென்று சேர்வதற்கு இடமுண்டு. இலைகள் உதிரின் அவ்வைகளை அதற்கே எருவாக்கிவிடலாம். இது பயிர்செய்யும் நிலம் ௬ அடி உயர வேலி உடையதாயிருக்க வேண்டும். அந்நிலம் குழிகள் வெட்டமுன் நான்குமுறை உழப்படுதலே முறை. எருமைகள் தமது தேகத்தின் தினவைப் பெரும்பாலும் புன்னை மரங்களிலே தேய்க்கும். அதனால் கிளைகள் முரிந்துபோம். ஆதலால் நன்றாய் உயர்ந்து வளரும் வரைக்கும் வேலி நிச்சயமாக இருக்கவேண்டும் இதைப் பயிர்செய்யத் தொடங்கி ஐந்துவருஷங்களுக்குமேல், எழுவருஷத்திற்குள் காய்க்கத்தொடங்கும். இதுவரைக்கும் நியாயமான செலவு போதும் அதிகம் பெருந்தொகைகள் கடன்படவேண்டியதில்லை. மூன்றுவருஷம் கழிந்தபின் தண்ணீரும் அதிக கவனமும் வேண்டியதில்லை. இதன்வரும்படி மிக அதிகம். செலவு மிகக் குறைவு. வெறும் இடங்கள் எவ்வளவு இருக்கின்றன. நம்மவர் வீண்காலங் கழிக்கின்றார்கள். அல்லது ஒருவர் செய்ததைப்பார்த்துத் தாமுஞ்செய்து எவரும் இலாபமடையாது அவரையுங் கெடுத்துத் தாமும் கெடுகின்றார்கள்.

இந்தவிதமாக, இவ்வூரிலே நன்றாகப்பயிர்செய்யக்கூடியன எவை என்று உணர்ந்து பயிர்செய்து புதிது புதிதாக ஒவ்வொருவரும் வெவ்வேறு பொருள்களைக்கொண்டு தனித்தனி பெருலாபமடையலாமே. புகையிலை என்பது ஒன்றே அன்றி வேறு கற்பக விருக்ஷம் இல்லை என்பதே நம்மவர் சிலர் கொள்கை. சிங்கப்பூர் முதலிய இடங்க

ளிற் சென்று தொழிலுமின்றி நோய்வாய்ப்பட்டு இறந்தொழிவதினும் இப்படிப்பட்டவைகளைத் தெரிந்து பயிர் செய்து பொருளீட்டிப் பெரும்பயனடைந்து குடும்பசம்ரக்ஷணம்செய்தல்இழிவாகுமோ. இவ்வாறு எம்மூரிலே பயிரிடுவதற்கேற்பன இவையிவைஎன எண்ணி அறிவிற்கு எட்டியவாறு ஆய்ந்து முன்னோர்கள் முறைகளையும் அநுசரித்துவிடாமல் ஒவ்வொருமுறையும் இன்னும் விரிவாக எழுதிவரின் நலமாகும். ஒருவர்க்குச் சேவைசெய்து பொருள் ஈட்டுவதினும் பயிர்வகைகளைப் புதிது புதிதாகக் கால இடவேற்றுமைகள் நோக்கிச் செய்வது மிகவும் பெருமை யுடையது. இப்புன்னையின் எண்ணெய் அதிகமாகுமாயின் ஊரிலே நன்றாக விற்கத் தொடங்கிவிடும். ஆதலால் கடற்கரைகளிலே வேறுபயிர்செய்தற்காகாது பயனற்றுக்கிடக்கும் இடங்களிலே ஒருசிறிதுநிலத்தை அடைத்து மாதிரிக்குச் செய்கைபண்ணிவரின் இதன் உண்மைபுலப்படும். இதனை யாராவது ஒருவர் செய்யத் தொடங்கின் மற்றவர்களும் பின்பற்றுவர்கள். இது நம்மூரிலே நன்றாய்ப் பயன் தரும் என்று அநேக அநுபவசாலிகள் நமக்கு உறுதியாகக் கூறியதைக் கேட்டே இதனை எழுதினோம். கைத்தொழிலும் பயிரிடுதலும் வியாபாரமுமே இனி எம்மூர் மேனிலைக்கு வருதற்குக் காரணங்களாகுமென்று எவருமறியவேண்டும் வேறு முயற்சிகள் அடிமைகளாக்கிவிடும். அதனால் பிறந்தவூர்க்கு ஒருபயனுமிராது. ஆதலால் இனி முறைக்கு முறை எழுதுவதை எவரும் கவனித்து வாசிப்பார்கள் என நம்புகின்றோம்.

இ. குருஸ்வாமிக்குருக்கள்
முத்துக்குமாரசுவாமிவித்தியாசாலை
கைதைநகர்.

பத்திரிகைகளின் வரவு.

விவேகபோதினி.

இது சென்னையினின்றும் சித்திரப் படங்களுடன் வெளிவரும் ஓர் சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. ககூ0அ-ம்வருஷ முதல் பிரசுரமாகித் தன்பெயருக்கேற்ப விவேகவிருத்திக்குச் சாதனமாகி நிலவுகின்றது. இதில் திராவிட ஆங்கிலேய பாஷைகளின் கரைகண்ட பண்டிதரத்தினங்களாகிய வித்யாதான மகோபகாரக சீலர்கள் பற்பலரால் மதவிஷயங்கள், நீதிகள், பெரியோர் சரிதைகள், இயற்கை அற்புதங்கள், உலகவொழுக்கங்கள், சுகாதாரம், விவசாயம், கைத்தொழில் வியாசங்கள், பாஷாவிஷயங்கள், மொழிபெயர்ப்புக்கள், சிறுவர்களுக்கான பக்கங்கள், ஸ்திரீகளுக்கான பக்கங்கள், சாஸ்திரீக விசேஷ வர்த்தமானங்கள், சிறந்த கற்பனாசரித்திரங்கள் (நாவல்) நாடகங்கள் என்று எண்ணப்படும் பற்பல அரிய விஷயங்கள் தெள்ளிய செந்தமிழ் நடையிலே எழுதப்படுகின்றன. ஆதலால் இது கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கல்விபயிற்றும் ஆசிரியர்களுக்கும் இன்றியமையாதது. இத்துணைச் சிறந்த பத்திரிகையினை வெளியிடும் "ஜனறல் சப்ளைஸ் கம்பனி" யாரின் தமிழபிமானமும் பரோபகாரமும் எவராலும் மறவாது பாராட்டப்படற்குரியனவேயாம். இன்னும் இப்பத்திரிகையின் கையொப்ப நேயர்களுக்கு ஷை. கம்பனியார் வெளியிடும் புத்தகங்களும் குறைந்த விலைக்கு அனுப்பப்படுகின்றன. இதன் வருட சந்தா ரூபா ௩.

பூர்ணசந்திரோதயம்.

இது சென்னை ராசதானியின் தென்பாகத்திலுள்ள பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹா சபையின் ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதில் மதவிஷயங்கள், அவைகளுள் நிகழவேண்டும் சகோதரபாவம், வேதாகமவிஷயங்கள், பக்தி, பகவத்கீதை, தத்துவோபதேசங்கள், அவைகளினுண்மை விளக்கங்கள், உபநிஷதங்களின் சாராம்சங்கள் முதலிய பற்பல பெறற்கருமையுடையனவே, கல்வி கேள்விகளிற் கரைபோகிய திராவிட ஆங்கிலேய பாஷாவிற்பன்னர்களாகிய மகா வித்துவசிரேட்டர்களால் செந்தமிழிலே மிகத்தெளிவாக எழுதப்பட்டுவருகின்றன. இவைகள் பற்பல வருஷங்களாக ஞானாசாரியர்கள் பலரிடத்தும் சென்று வழிபட்டு அவர்குற்றேவல் வழியொழுகிப் பின் கேட்டுணாற்பாலனவன்றி இவ்வளவு இலகு

☞ கடிதர்களுடைய அபிப்பிராயங்கள் ஒன்றும் பத்திராதிபரைச் சாரமாட்டா. ப—ர்.

வில் ஒருவருத்தமுமின்றி அறிதற்குரியனவாயிருந்தவைகளல்ல. இஞ்ஞானதானகாரணர்களாகிய பிரமஸ்ரீ. ப. நாராயண ஐயர் B. A. B. L. F. T. S. அவர்களும் பிரமஸ்ரீ. அ. ரங்கஸ்வாமிஐயர் B. A. B. L. F. T. S. அவர்களும் இதன் பத்திராதிபர்களாகும். இவருள் முன்னையோர் "ஹிந்துமததூஷணபரிகாரம், மனிதனின் வமிசாவழியினுண்மை, பிராசீனதருமங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும், யோகசூத்திரங்கள்," (ஆங்கிலேயபாஷையில்) என்னுமிஞ் ஞானநூல்களுக்கு ஆசிரியர்களாகும் என்றால் இனி அவர்களின் வித்தியாசாமர்த்தியத்தை விரித்துக் கூற எழும் என்னுரைகள் வேண்டாகூறலாய் முடியும். இதன் வருடசந்தா ரூபா உ.

இப்பத்திரிகைகளை எமக்கு அனுப்பிய பத்திராதிபர்களுக்கு நன்றியறிதலான வந்தனங்கூறி நமது பத்திரிகையையும் அனுப்பிவருகின்றேம். ப—ர்.

☞ சிற்சில காரணங்களால் புத்தகவரவு இம்முறை எழுதப்பட்டிலது.

சமாசாரம்.

ஆனரபிள். V. கிருஷ்ணசாமி ஐயரவர்கள்:—சென்னை ஹைக்கோட் நீதிபதியாயிருந்த ஆனரபிள். வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் எக்சிக்கியூடிவ் கவுன்சிலில் பூபலிமகாராஜா அவர்கள் இருந்த இடத்தில் மெம்பராக நியமனஞ் செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

வித்தியாசட்டம்—இலங்கைவித்தியாசட்டத்திலே பின்வருந் திருத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது வருகிற பங்குனிமீ 1ங்வ யுடன்நடைபெறும் இத்திருத்தச்சட்டத்திலே பரீட்சை இடாப்புகள் உதவிநன்கொடைவிஷயங்களைப்பற்றி முதன்முதல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவிஷயங்கள் 1912ஹூ தைமீ 1உயோடேயே சாதிக்கப்படும். திருத்தவிஷயங்களாவன:- (1) எத்தரத்திலாவதுபரீட்சையிற்சித்திபெறாத எந்தமாணவனையும் வித்தியாகர்த்தரின் உத்தரவின்றி மேற்றரத்துக்கேற்றக்கூடாது. (2) பரீட்சைகளிலே உபாத்திமார் தம் மாணவர்க்கு எவ்வகை உதவிசெய்ய முயற்சித்தாலும் அவர்களின் தராதரப்பத்திரம்நிறுத்தப்பட அல்லது முற்றாய்நீக்கப்பட அல்லது உதவிநன்கொடைப்பணத்தில் அரைவாசி இழக்கநேரிடும். (3) முகாமைக்காரர் உபாத்திமார்களுக்குச் சம்பளங்கொடுக்கத்தவறினல் அம்முகாமைக்காரருக்குக் கொடுக்கப்பட்டிவேண்டியதாய்த் தம்மிடமுள்ள நன்கொடைப்பணத்திலிருந்து முகாமைக்காரராற் கொடுக்கப்படாதிருக்குந்தொகையை வித்தியாகர்த்தர் கொடுக்க அவருக்கதிகாரமுண்டு. (4) C பள்ளிக்கூடங்கள் DI. இடாப்பின்படி நடைபெறல்வேண்டும். (5) முகாமைக்காரரோடு பண்ணிக்கொண்ட பொருத்தத்தைமீறின குற்றம், மாணுக்கரைமாற்றிப் பரீட்சைக்குவிடுதல், இடாப்புமுதலியவற்றிற்செய்யப்படும் கள்ளத்தனம், பரீட்சையில் மாணுக்கர்க்குதவிசெய்தல், பீனல்கோட் கட்டளைச்சட்டப்படி அபராதியாதல், அடாத துர்நடை என்னும் இக்குற்றச்சாட்டுகளினிமித்தம் உபாத்தியாயர்களின் தராதலப்பத்திரம் நிறுத்தப்பட அல்லது முற்றாய்நீக்கப்படக்கூடும். (6) கிரமப்பயிற்சிக்காய் அங்கிலபாடசாலைகளுக்கு 30 ரூபா நன்கொடை கொடுக்கப்படும். அதில் விசேஷதேர்ச்சிகாணப்படின் இத்தொகை 50 ஆகும். (7) சுதேசபாஷைமுறையை ஆதாரமாய்க்கொண்டு நடத்தப்படும் ஆங்கிளபாடசாலைகளிலே மாணுக்கர் வாசினை எழுத்து இலக்கணவிஷயங்களுக்குத் தமிழிலே பரீட்சைக்குவிடலாம். ச-னி

நிலம் பதிதல்:—எல்கடுவையில், வெஹகலைக்கிராமத்தில் (2) இரண்டு ஏக்கர்நிலம், தன்னிடத்துள்ள மரங்களோடும் பூமியினுள்ளே ஆழ்ந்து போயிற்று.

புழுதிபெருக்கும் யந்திரம்:—லண்டன் நகரிலே வீதிகளிலே புழுதிகளைப் பெருக்கும் ஓர் யந்திரம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அது ஒருமணிநேரத்துள், எட்டுமைல் தூரம் பெருக்கி நீர் தூவும் வன்மையுடையதாம்.

இருபது பெண்களை மணஞ் செய்தல்:—ஆஸ்டிரியன் காலீஷியாவிலே கிராக்கோ என்னும் ஊரிலே உள்ள டேவிட்காக் மென் என்பவர் பிச்சைக்

காரரை நன்னிலைக்குக் கொண்டுவரும்பொருட்டு ஒரு வித்தியாசாலை தாபித்து அதிற்சாமர்த்தியரான இருபது பெண்களை விவாகஞ்செய்துகொண்டன ராம். இப்பெண்கள் இரந்து தொகுத்துவைத்தி ருந்த பொருளை அபகரிக்க எண்ணிப் பலபெண் களை விவாகஞ்செய்தற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணையில் இருக்கின்றாராம்.

ஸ்ரீ. மு. முகம்மது அசீசு சாகிபு வைத்தியர் அவர்கள்:—இவர், யாழ்ப்பாணம் வண்மேற்கு முஸ் லீம் தெருவில் வசிப்பவர். ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநா வலர் அவர்களின் மருகரும் மாணுக்கரும் வித்துவ சிரோமணியுமாகிய ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பல பிள்ளை அவர்களோடு இடைவிடாது உடன்பயி ன்று தமிழ்நூற் பயிற்சியுடையராய் கவிபாடும் வன் மையோடு தமிழ் யூனானிவைத்திய நூற்றுறைகளில் தேர்ச்சியுற்றுச் சிறந்த வைத்தியராய் விளங்கியவ ரும் தம்மதாசார அநுட்டானங்களிற் றவுறாதொ ழுகி ஏனையோர்க்கவைகளை அறிவுறுத்துவதை மேற்கொண்ட ஞானசீலரும் ஆகிய காலங்கடந்து போன ஸ்ரீமத். செய்குஅப்துல்ஹமீது ஆலீம்சாகிபு அவர்களின் மைந்தரும் மாணவருமாயுள்ளவர். நியாயதுரந்தரர் ஸ்ரீ. மு. அப்துல்காதர் பீ. ஏ. அவர்களின் சகோதரர். கல்வியறிவொழுக்கங்களி ற்சிறந்தவர். தம்முன்னோர்போலவே வைத்திய நூற் திறமையுடையவர். சிந்தூரவகைகள், பஸ்பவ கைகள், மகா ஏலாதிமுதலிய அரிய குளிகைவகை கள் எண்ணெவகைகள் முடிப்பதிலும் வைத்தியம் செய்வதிலும் பரம்பரையாகக் கைவந்த சித்தியுடை யோர். ஆதலால் இவரிடத்தில் பலரும் ஷவகை களை வாங்கிவருகின்றார்கள். இப்பொழுது இவர் கொழும்பிலுள்ள நண்பர்களது கேள்விப்படி அங் கே வைத்தியஞ்செய்தற்காகக் கொழும்புக்குச் சென்றிருக்கின்றார்கள்.

பெண்கள் கல்வி.

பெண்களுக்குச் சீரிய அணிகலம் கற்பேயாம். அவ்வணிகலத்தை அழகுறுத்துவ பற்பலவாயினும்

"காலையுவந் தட்டிலுறல் காதலுட னேசமைத்த லேலவதை யன்பர்க் கினிதூட்டல்—வேலையிதே யென்ன விருந்துவிருந் தோம்ப லெழின்மகப்பே றன்னலின்பீ னுங்கா னுறல்."

"மடநாண மச்சந் தனவாக்கன் மன்ன னடிவருடிப் பின்றூங்க லாங்கே—விடிபுமுன முன்றிலலங்கரிக்க முன்னெழுதன் முற்கடவு ளென்றவன்றாள் போற்ற லெழுந்து."

"இன்னகுணம் பன்னிரண்டும் யாருடையா ரோவவரே, யுன்னு கணவர்க் குயிர்நிலையா—மெ ன்ன, வறிந்தோராற் கேட்டாங் கொழுகுவா ளானுள், சிறந்தகற்புச் சாவித் திரி."

அவைகளுள் இப்பன்னிரண்டும் சிறந்தனவெ ன்று விதந்தெடுக்கப்பட்டனவாம். வேதமாதிநூல் களின் றுணிபாவன இவையெனத்தெளிந்து, சிற் பினும் இருப்பினும் கிடப்பினும் நடப்பினும் உண் ணினும் உறங்கினும் உரைப்பினும் உவப்பினும் வெறுப்பினும் பணியினும் பிணியினும் புணர்வி னும் பிரிவினும், தன்னைக் கொண்டவனது குறிப் பிற்கும்விருப்பிற்கும் மாறுபடுதலின்றி பணிவுடை மையோடொழுகுந்தன்மையாலும், குறிப்பின்வழி ஏவற்றலைநிற்கும் இயல்பினாலும் பணிவுடைமைபி னுறுதியினாலும், பெண்டன்மைக்குரிய தீயகுணங் கள் தேய்வுறத்தொடங்கும். தொடங்கவே நாய கன் மனம் கனிந்து உருகி, அடியவர்பால், இறை வன் திருவுளம் செல்லுமாறுபோல, மலத்தின் செய்தியாலவனிடை நின்ற சில தீயகுணங்களும் தேய்வுற்று, நாயகிபால்நடந்து அபேதமாகிநிற்கும்.

மகளிர் நல்கும் சிற்றின்பச்சுவை ஒன்றேநின்று, இத்துணைப் பயன்தராதாதலினால் நாயகர் மன நிலையைக் கவர்ந்து கோடற்குரிய உபாயமாவன மேற்கூறியவைகளேயாமென்று எமது சகோதரி கள் அறிதல் வேண்டும்.

இஃதறியாதார் சிலர் பற்பல மந்திரங்களும் மரு ந்துகளும் மூலிகைவகைகளும் தேடி உழலாநிற்பர். நாம் மேற்கூறியவைகளினும் சிறந்தன பிறஇல்லை.

பெண்களும் அவர்கள் அவயவ அளவுகளும்.

சுகதேகியாகிய ஒருபெண்ணின் கண் ணகலம் ந பங்குகொண்டது, முகத்தின் குறுக்களவாகும். வாயினது மூன்றில் இர ண்டுபங்கு அகலம் கண்ணினளவாகும். கண்ணினது நீட்சியினிருமடங்கு காதி னது நீளமாகும். இருகண்களுக்கும் இ டையிலுள்ள தூரம் ஒருகண்ணின்நீளமாகு மென்று ஓர் கணிதசாஸ்திரியார் வரையறை செய்கின்றார்.

லலிதாம்பாள்.

யாழ்ப்பாணம் இருபாலை
வித்துவசிரோமணி
சேனாதிராயமுதலியாரவர்கள் இயற்றிய

நல்லைவெண்பா.

(௯௰-ம் பக்கத்தொடர்ச்சி.)

கண்டைமா வேயன்றிக் கற்றவரு மற்றவருந்
தண்டம் பொருந்தாத் தனிநல்லை—விண்டுதொறு
மாடும் பதத்திறு னண்டர்களு நான்மறையுந்
தேடும் பதத்திறுன் சேர்வு.

கண்டை - யானைமணி. அது கயிற்றாற் பிணித்தலைச் செய்து மருங்கிலணியப்பட்டிருக்கும். "கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கிற் பெருங் கையானை" என்பதனானுமுணர்க. கண்டைமாவே தண்டம் பொருந்தும் என்பதாம். இப்பொருட்குத் தண்டம் - யானைசெல்வழி. கற்றவர் தண்டம் பொருந்தாமையாவது, கல்விகேள்விகளாலமைந்த புலவர்கள், தங்கல்வி, தம் நாட்டில் நன்குமதிக்கற்பாடுடையதன்றாயின், தம்பாலுற்றதனாலதற்குநேர்ந்த இழிவரவு போக்குவான் உய்க்குமிடமறிந் துய்ப்பவும், பரிசிற்பேறு முதலிய பொருள் வருவாய்வேண்டியும் வேற்றூர் அடையாமை. இப்பொருட்குத்தண்டம் - நாடு. சொற்சுவை பொருட்சுவை நுகர்ந்து கல்வியினளவுகண்டு மதித்து, வரைவின்றிப் பரிசிலீயும் பெருங்கொடையாளர்கள் நல்லூரில் இருந்தமையின் புலவர்கள் பதியினின்றும் பெயர்தலை அறியார் என்பதாம். மற்றவர் தண்டம் பொருந்தாமை - கல்லாதோரும் தண்டனையைப் பொருந்தாமை. கற்றிலராயினும் உணர்வுமிகுதியானும் கேள்வியானும் தேயவியற்கையானும் வழியலா வழி மேற்செல்லார் ஆதலின் தண்டனையைப் பொருந்தார் என்பது கருத்து. கற்றவரை அன்னர் என்றற்கு கல்லாதாரும் வேண்டுமாகலின் மற்றவரும் என்றார். கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமுடைமையுமாகலின், கற்றிலராயினும் அவ்வொழுக்கமுடைமையிற்றிரிபிலர் என்றபடி. விண்டு - மலை, குன்று. பதம் - திருவடிகள், வீடு. (௩௭)

நீல னிலவார னீள்கதிர்பொன் வெள்ளிபச்சை
சால்பவனத் தால்வான் றருநல்லை—பால்வளருந்
தாமோ தரன்மருகன் றண்ணகையால் விண்ணமரர்
தாமோ தரன்மருகன் சார்பு.

நீலன் - சனி. நிலவு - சந்திரன். ஆரல் - செவ்வாய், கதிர் - சூரியன். பொன் - வியாழன். வெள்ளி - சுக்கிரன். பச்சை - புதன். சால் - பொருந்திய. பவனம் - இராசி. என விசும்பிற் கியையக் கொள்க. வான் தகு - விசும்பினை நிகர்க்கும். பவனம் என்பதற்குச் சுவர்க்கலோகம் எனப் பொருள் கொண்டு அதற்கேற்ப வேறுகூறுவாருமுளர். பொன்னும் வெள்ளியும் இவ்விரத்தினராசிகளும் மிகுந்துள்ள வீடுகள். என நல்லூருக் கியையக் கொள்க. ஆல் - ஆலிலை. ஆகுபெயர். வளர்தல் - கண்வளர்தல். நகையால் - பேரின்ப மலர்ச்சியோடு. அமரர்தாம் ஓது அரன் - எனப்பிரிக்க. ஓதுதல் - துதித்தல். மருகன் - மரபினுள்ளான். "தவிரா வீகைக் கவுரியர் மருக" என்புழிப்போல.

வரும்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

கணபதிதுணை.

சேதுபுராண உரை.

(க0௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

கடவுள் வாழ்த்து.

சபாபதி.

பூமாதுபொலிவெய்தமுகுந்தன்காக்கும்புவிமாதுவளம்பெரு
கப்புலமைசான்ற, நாமாதுநலந்தழைப்பவிருள்கால்சீக்குநகைநில
வுதவழ்மவுலிநன்னீர்க்கங்கை, மாமாதுபுனறுளிப்பமறைகள்வாழ்
த்தவளர்தில்லையம்பலத்துள்வாமநீங்காத், தேமாதுவிழிகுளிர்ப்ப
வமரர்போற்றத்திருநடஞ்செய்நூபுரத்தாள்சென்னிசேர்ப்பாம்.

இ—ள். பொலிவெய்த வளம்பெருக நலந்தழைப்பத் துளிப்ப வாழ்த்தக் குளிர்ப்பப் போற்றத் திருநடஞ்செய்யுந் தாளைச் சென்னி சேர்ப்பாம் என்றார் என்க.

பூமாது - இலக்குமி. புவியாகிய மாது. என்க. புலமை - அறிவுடைமை. நாமாது - கலைமகள். நலம் - கற்றதற்கேற்ப வேண்டும் மெய்யுணர்வொழுக்கங்கள். * கால் சீத்தல் - கெடுத்தல். கால் சீக்கும் என்புழிக் "கால்" என்பதனை வினைக்குமுன் வந்த உபசர்க்கம் என்பர் பிரயோகவிவேகநூலுடையார். "முழுவலியிருள்கால்சீக்குமுதன்மையில்" என்பது தணிகைப்புராணம். நகை - ஒளி "நகைதாழ்புதுயல்வரூஉம்" என்புழிப்போல. நூபுரம் - ஈண்டு மறைச்சிலம்பு. அவர் திருவடியிற் கிடந்து முழங்குவன வேதங்கள் என்றுணர்க. "மறையே நமது நூபுரமாம்" என்றார் பிறரும்.

பஞ்சகிருத்திய நடனஞ் செய்தருளுதலால், உலகபேதங்களும், அவர் நாடும் கல்விப்பொருள் செல்வப்பொருள்களும் பிறவும் பல்கிவருதலுடையனவாயின என்பதாம். உலகபேதங்கள் எனவே அவ்வவ்வுலகினரும் அடங்குவர்.

இவ்வுலகத்தின்பங்கட்குக் காரணம். தன்னை ஆக்கினோர் அறிவிலாதாராயினும், இழிகுலத்தாராயினும் பிறரை, பிற்றைநிலை முனியாது அவர்காற்கீழ்ச் சென்று நிற்கப்பண்ணும் பொருளேயாகலிற் "பூமாதுபொலிவெய்த" என்று முதற்கட்கூறப்பட்டது "பொன்னின்றுகும்தரணி" என்பதையும் நோக்குக.

---

* இது இலக்கணசந்திரிகையில் உபசருக்கக்கூறுபாட்டில் சுன்னாகம் ஆசிரியர் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்களால் முடித்துக்காட்டப்பட்டிருக்கின்றது.

"முகுந்தன் காக்கும் புவி" எனக் காவற்கடவுட் டொழிலையும் புவியினையும் விதந்து புணர்த்தோதவே ஏனை இருவர் தொழிலும் மற்றைய உலகங்களும் கூறாதே அமையும். என்னை!

"சங்கேந்துமலர்க்குடங்கைப்புத்தேளுமறைக்கோவுந்தழுழ்கால்சூலம்
அங்கேந்துமம்மானுந்தத்தமதுதொழிற்றலைநின்றூற்றச்செய்து
.........மணிமன்றுட்குனித்தருளும்பெருவாழ்வை" என்றும்

"எழ்பெரும்புவனமுய்யவெடுத்துநடநவின்றஅருள்" என்றும் பெரியாரும் பணித்தாராகலின். தன்பால் வந்து தோன்றிய ஊனடைந்த உடம்பின்பிறவியானது, தான் அடைதற்பாலதாகிய உறுதியைச்சாருதற்கிடமாய்நிற்பது அதுவேயாகலின். புவிமாதின் வளப்பெருக்கும் வேண்டப்படுவதாயிற்று.

கிடக்கைமுறையில் நாமாதின் செய்தி பின்னதாயிற்று; பொலிவெய்தி வளம்பெருகாதாயின், தன் விளக்கமறு மதனியல்பு நோக்கி. "வறுமையிற் கல்விபோலப்புலப்படா" என்றார் பிறரும்.

சரணடைந்தார்க்கருளுந் தண்ணளியுடைமையும், அவன் அவள் அதுவென்னு முத்திறப்பாகுபாட்டினையுடைய இப்பிரபஞ்சத்தினைத் தாங்கி நிற்கும் தலைமையுந்தோன்ற, நிலவும் நீரும் மவுலியும் கூறப்பட்டன. சந்திரன் - ஆண். அவன். கங்கை - பெண். அவள். மவுலி - அஃறிணை. அது. "நிலவுலாவியநீர்மலிவேணியன்" என்னும் அருட்டிருவாக்கினையும் காண்க.

வேதங்களே மன்றுளாடும் ஆநந்தமதுவினை உண்ண எழும் நசையால் வந்து சூழ்ந்து அரற்றிநிற்கும் சுரும்புகள் எனப்பட்டமையின், "மறைகள்வாழ்த்த" என்றார். "மன்றுளாடுமதுவின்னசையாலே மறைச்சுரும்பறைபுறத்தின் மருங்கே" என்பதூஉமிப்பொருட்டு.

உணர்வரியராயினும், காட்டவனல்போல் உடல்கலந்து உயிரை எல்லாம் ஆட்டும் ஒரு நட்டுவன் ஆகிய எந்திரப்புலவன் என்று தம்மையும் தமது நடனகாரணவுண்மையினையும், யாவருமுணர்ந்து தெளியுமாறு, தாமே வலிந்து திருவுருக்கொண்டு வெளிப்பட்டு அம்பலமாகிய வெளியிற் கூத்தாடி நிற்பினும், அது சாந்தோக்கிய கைவல்யோபநிடதங்கள் கொண்டு, தகரவித்தைப்பொருண்மைகண்டு உணரப்படும் அதிரகசியப் பொருளாமென்பார். ஏனை இடப்பொருளுருபுகளை ஒழித்து "உள்" என்றார்.

ஈன்றவடானே மக்களேயைகல மருந்துட்கொள்ளுமதுபோல. பிரிவின்றித் தாதான்மியமாய் நின்ற இறைவியார் தாம் ஆன்மாக்கள் மலத்தொடர்பற்று இளைப்பு நீங்கி வீடுபேறுறவே, ஆநந்தத் திருநடங்காணு மருட்களேக்கின் மகிழ்வுகூர்தலின், "தேமாதுவிழிகுளிர்ப்ப" என்றார். இதனை "அவளும் தானுமுடனே காண்க". "உரையுணர்வுக்கெட்டாவொருவன்மிகுபஞ்சாக் கரத்தால் வரைமகடான்பாதி—பரையிடமாய்க், காணும்படியேகருணையுருக்கொண்டாடல், பேணும்வர்க்குண்டோபிறப்பு" என வரும் ஏதுக்களாலறிக. இன்னும் திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை இடக்கண் ஞானப் பெருமகள் நுதற்கண்ணுகப் பெற்றுடையவர் விழிகுளிர்ப்பவே, செல்வம் கல்வி வீடு தாமே வந்துறுமாகலின், "விழிகுளிர்ப்ப" என்பது மேற்கூறியதனை வலியுறுத்திநின்றது. "ஓர்பங்கேந்து பெருமாட்டி விழ்களிப்ப........மணிமன்றுட் குனித்தருளும்" என்றுமிது.

பொலிவெய்தன் முதலிய பயன்கள் வந்துறத் திருநடஞ்செய்தல் என்றதனால், தனக்கென வொன்றும் "வேண்டுதல் வேண்டாமை இலாதவர்" என்பதூஉம், உயிர்கண்மாட்டே பயன்படுதலுடைமையின், பஞ்சகிருத்திய தாண்டவம் எனப்படுமென்பதூஉம் பெற்றாம். "இமையளவுமுபகாரமல்லால்வேறொன்றியக்காநிர்க்குணக்கடல்" என்பதுமது.

திருவடிப்பேறே வீட்டின்பமாய் முடிதலின் "தாள்சென்னிசேர்ப்பாம்" என்றார். அதனை "அறவாநீ யாடும்போதுன் னடியின்கீழிருக்க வென்றார்" என்றும் "புண்ணியனே யுன்னடிக்கே போதுகின்றேன்" என்றும் "முத்திநான்றமலர்ப்பதத்தேநாடு" என்றும் சிவாநுபூதிச்செல்வர்கள் கூறியவாற்றானுமுணர்ந்துகொள்க.

"பூமன்னு நான்முகத்தோன் புத்தேளி ராங்கவர்கோன், மாமன்னுசோதி மணிமார்பன்—நாமன்னும், வேதம் வேதாந்தம் விளக்கஞ்செய் விந்துவுட, னாதநாதாந்த நடுவேதம்—போதத்தா, லாமளவுந்தேட வளவிறந்த வப்பாலைச், சேமவொளி யெவருந் தேறும்வகை—மாமணிசூழ், மன்று ணிறைந்து பிறவி வழக்கறுக்க, நின்ற நிருத்த நிலைபோற்றி" என்றெழுந்த அருமைத் திருவாக்கை இத் திருவிருத்தத்துடன் நோக்குக. (௧)

வரும்.

☞ சேதுபுராண மூலமும் எம்மாலெழுதப்படும் இவ் உரையும் விரைவிற் புத்தகரூபமாக வெளிப்படுத்தப்படுமாதலினால் ஒருவரும் அச்சிடப்படாது.

ஆ. சண்முகரத்தினசர்மா
பத்திராதிபர்.

இந்துஸ்தான் சகாய வீமாச்சங்கம் (லிமிற்றட்)

கஅஅஉ ம் வருஷத்து இந்தியசங்க சட்டப்பிரகாரம் இச்சங்கம் பதிவுசெய்யப்பட்டது.

இதற்கு மூலதனமாக ஒருகோடிரூபா அநுமதிசெய்யப்பட்டிருக்கின்றது.

இதன்தலைமை அதிகாரசாலை கல்கத்தாவிலே டல்ஹவுஸி சந்தி ரு0 ம் நம்பர் கட்டடம்.

சபாநாயகர்

காஸிம்பசார் மகாராஜா மனீந்திரசந்திர நந்திபகதூர்

உப சபாநாயகர்கள்

க. நாட்டூர் மகாராஜா ஜகதீந்தரநாதருய் பகதூர்.

உ. தீகபட்டியாராஜா பிரமாதநாதருய்.

☞ இந்தச் சங்கத்தில் நூறுரூபா முதற்கொண்டு எவ்வளவு பெருந்தொகைக்கும் பொருந்திக்கொண்டு அதற்குரிய வீதப்படி கட்டிவரலாம். மற்ற வீமாக் கம்பனிகளைப் பார்க்கிலும், இந்தச்சங்கம் விசேஷ அனுகூலமுடையது. இந்தச்சங்கத்திலே கட்டுகிற காசு சிலகாலங்களிற் கட்டத்தவறினும் நட்டமாகாது. மற்றக் கம்பனிகளைப்பார்க்க இச்சங்கத்தினது கட்டுவீதம் மிகச் சகாயமானது.

எஸ். கே. லோட்டன் அன் கோ
இலங்கை ஏசண்டு
பறங்கித்தெரு
யாழ்ப்பாணம்.

பத்திரிகைவேதனம்.

	ரூ.	ச.
உள்ளூருக்கு வருஷம் க-க்கு	உ	00
இலங்கை இந்தியாவுக்கு வருஷம் க-க்கு	உ	உரு
பினாங்கு சிங்கப்பூர் வருஷம் க-க்கு	உ	ருஅ
மோரீஸ் நெட்டால் வருஷம் க-க்கு	ரு	00
தனிப்பிரதி		உ0

☞ கையொப்ப நேயர்கள் பத்திரிகை வேதனத்தை முற்பணமாகஅனுப்பி உதவி செய்யும்படி வேண்டுகின்றோம்.

விளம்பரவேதனம்.

	ரூ.	ச.
வரி க-க்கு		அ
காற்பத்திக்கு ...	க	00
அரைப்பத்திக்கு ...	உ	00
ஒருபத்திக்கு	ரு	ரு0
ஒருபக்கத்துக்கு ...	சு	00

திருஞானசம்பந்தர் அச்சுக்கூடத்தில் விலைக்கிருக்கும் புத்தகங்கள்.

	ரூ.	ச.
திரிகோணாசலபுராணம்	0	எரு
இரகுவம்சம்	க	எரு
நல்லைவெண்பாமூலம்	0	க0
யாழ்ப்பாணச்சமயநிலை விரோதிகிருது வருஷம்	0	க0
வாக்கியபஞ்சாங்கம்	0	உரு
திருவூடல் (அச்சில்)		

போ. மாணிக்கம்பிள்ளை
வண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்.

விக்கிரய புத்தகம்.

		ரூ. சதம்
க.	தண்டியலங்காரப்புத்துரை	க—00
உ.	யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை	க—00
ரு.	சூடாமணிநிகண்டு கஉ தொகுதி க-வது உ-வது சொற்பொருள் கஉ-வதுஉரை	க—00
ச.	இதோபதேசம்	0—அ
ரு.	நீதிநெறிவிளக்கப்புத்துரை	0—ருசு
சு.	திருவாதவூரர்புராணமூலம்	0—உரு
எ.	இலக்கணசந்திரிகை	0—உரு
அ.	மேகதூதக்காரிகை	0—உரு

அ. குமாரசுவாமிப்பிள்ளை
சுன்னாகம்.

துய்யதோர்மறைகளாலுந் துதித்திடற்கரியசெவ்வேள், செய்யபேரடிகள்வாழ்க சேவலுமயிலும் வாழ்க, வெய்யசூர்மார்புகீண்ட வேற்படைவாழ்க வன்னான், பொய்யில்சீரடியார்வாழ்க வாழ்கவிப்புவனமெல்லாம்.

Printed and published by the Proprietor and Publisher **P. Manickam Pillai** *at the Tirugnanasampanther Press, Jaffna*

உ

சிவமயம்.

Dear Sir, *7—4—11.*

"ஞானப்பிரகாசம்" என்னும் பத்திரிகையின் சொந்தக்காரராயிருந்த பொ மாணிக்கம்பிள்ளை என்பவர் ஷை பத்திரிகையையும் அதற்குரிய எவ்வகை உரித்தையும் தமது அச்சுயந்திரசாலையையும் ஷை பத்திரிகையின் பத்திராதிபராயிருந்து நடத்திவந்த எமக்கு விற்றுவிட்டுத் தாம் விலகினமையால் எமது "ஞானப்பிரகாசப்" பத்திரிகையின்பொருட்டு வரவேண்டிய கையோப்பப்பணத்தை எமதுவிலாசத்திற்கனுப்புவதன்றி வேறெவரிடத்திலும் கொடுக்காதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

B. M. A. Sanmugaretna Sarma
Editor & Managing Proprietor.
GNANAPIRAKASAM.
VannarPonnai POST *Jaffna.*

GENASA PRESS.